**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் சித்திரைத் திங்கள் 08 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.450/2022-ல்**

**அசல் வழக்கு எண்.03/2021**

1. உ.ரவிச்சந்திரன், வயது 52, த/பெ. உத்திராபதி, இந்து, விவசாய தொழில் கதவு எண்.1/113, வடக்குத்தெரு, ஆலங்கோட்டை கிராமம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.
2. உ.ராமச்சந்திரன், வயது 58, த/பெ. உத்திராபதி, இந்து, விவசாய தொழில் கதவு எண்.1/113, வடக்குத்தெரு, ஆலங்கோட்டை கிராமம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்கள்/வாதிகள்

**// எதிர்//**

1. கோச்மேன், வயது 45, த/பெ. மாரிமுத்து, இந்து, விவசாதொழில் கதவு எண்.3/490, மெயின்ரோடு, ஆலங்கோட்டை கிராமம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.
2. பாலையன், வயது 60, த/பெ.உத்திராபதி, இந்து, விவசாய தொழில் கதவு எண்.2/72 வடக்குத் தெரு, கண்டிதம்பேட்டை கிராமம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.
3. சார்பதிவாளர்,சார்பதிவாளர் அலுவலகம், உள்ளிக்கோட்டை, மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.
4. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர்.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது, கடந்த 27.10.2022 ம் தேதியில் தவறுகைக்காக தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கை கோப்பில் எடுத்து வழக்கை நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி உ.ந.ச.கட்டளை 9 விதி9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள் :- 10.11.2022,**

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் :-** 17.11.2022

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு 17.11.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு (24.03.2023) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. G.ஜீவானந்தம்** அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், 3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசுத்தரப்பு வழக்கறிஞர் **திரு. V. சச்சிதானந்தம்** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று(21.04.2023) இந்நீதிமன்றம் வழங்கும்.....

-

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனுவானது கடந்த 27.10.2022 ம் தேதியன்று வாதிகளின் வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேற்படி வழக்கை மேல் நடத்திட அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. மனுதாரர்கள்/ வாதிகள், இம்மனுவின் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-ஐ இவ்வுத்தரவு தேதியிலிருந்து 1 மாத காலத்திற்குள் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(S/d. A.S.Ameerdheen),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)